**06.08.2026**

CC.No. 34/2021 ராஜ்குமார் த/பெ. ஜெயபால் PW1

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

எங்கள் வீட்டிலிருந்து நாங்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். வீட்டிலிருந்து தோட்டத்திற்கு செல்வதற்கு வடக்கிலிருந்து தெற்காக செல்ல வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து கல்லக்குடி காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 10 கி.மீ தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்த உடனேயே வயலில் வேலை செய்து கொண்டிருந்த நபர்கள் கூட்டமாக வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலையில் இருபுறமும் உள்ள வயல்கள் யாருக்கு சொந்தமானது என்றால் சம்பவம் நடந்த சாலையின் தெற்குபுறம் உள்ள வயல் யாருக்கு சொந்தமானது என்றால் சந்தனமேரி என்பவருக்கு சொந்தமானது. மற்றொரு புறம் உள்ள வயல் குறித்து எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் அது எந்த நிறுவனத்தை சேர்ந்தது போன்ற விவரங்களை போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்ற விவரத்தை நான் போலீசாரிடம் சொன்னேனா

என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி சென்றது என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் அந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் தான் இருசக்கர வாகனமும், லாரியும் இருந்தது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. சம்பவ தினத்தன்று எனது அப்பா தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் இல்லை. நான் எனது அப்பா ஒரே வீட்டில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். என்னுடைய புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ நான் ஏன் எனது அப்பாவுடன் இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்பதற்கான காரணத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் எவ்வளவு நேரத்தில் வந்தது என்றால் தோராயமாக அரை மணி நேரத்தில் வந்தது. நான் தான் எனது அப்பாவை மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. நான் எனது அப்பாவை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு விட்டு காவல் நிலையம் சென்றுவிட்டேன். புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை. எனது நண்பர் எழுதினார், கையொப்பம் மட்டும் செய்தேன். நான் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், தகவல் கேள்விபட்டு சம்பவ இடம் சென்றேன் என்றாலும் சரியல்ல. நான் எப்போது காவல் நிலையம் சென்றேன் என்றால் சம்பவ தினத்தன்று மாலை 5.00–5.30 மணியளவில் சென்றேன். அப்போதே நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் நான் எந்த இருசக்கர வாகனத்தில் சென்றேன் அதன் பதிவெண் போன்ற விவரங்களை புகாரிலும், போலீசார்

விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லாததனால் தான் நான் எனது அப்பாவுடன் ஆம்புலன்சில் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் இழப்பிற்கு இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்தேன் என்றாலும், அந்த வழக்கு முடிந்து இழப்பீடு பெற்றுக் கொண்டேன் என்றாலும் சரிதான். எனது அப்பாவின் இறப்பிற்கு இழப்பீடு பெறுவதற்காக ஒரு பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் கவனக்குறைவு தான் இந்த விபத்திற்கு காரணம் என்றாலும், அதை சொன்னால் இழப்பீடு கிடைக்காது என்பதற்காக அதனை மறைத்து பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது அப்பா தான் சம்பவத்தின் போது அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயலும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.06 18:31:14 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**<u>06.08.2026</u>**

CC.No. 34/2021 சந்தோஷ்குமார் த/பெ. ஆரோக்கியசாமி PW2

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நானும், அ.சா.1 ராஜ்குமாரும் நண்பர்கள் என்றால் சரிதான். நான் எங்கு மெக்கானிக் கடை வைத்துள்ளேன் என்றால் கீழப்பளூரில் மெக்கானிக் கடை வைத்துள்ளேன். சம்பவ தினத்தன்று நான் வீட்டில் இருக்கும் போது தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடம் சென்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ தினத்தன்று இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். போலீசார் விபத்து தொடர்பாக என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையில் சம்பவ சமயத்தில் எனக்கு சொந்தமாக இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்பதை சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி சென்றது என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு சொந்தமான இருசக்கர வாகனம் என்ன வகையான இருசக்கர வாகனம் என்றால் ஹோண்டா சைன் 125CC வாகனம் ஆகும். வயல் வேலை முடிந்து அனைவரும் ஒன்றாக கிளம்பினோம் என்றால் சரிதான். வயலில் இருந்து சம்பவம் நடந்த இடம் எவ்வளவு தூரம் என்றால் 1 1/2– 2 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த உடனேயே அருகில் உள்ள வயலில் இருந்தவர்கள் கூட்டமாக வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் ஜெயபால் என்பவருடன் ஆம்புலன்சில் சென்றேனா என்றால் இல்லை.

சம்பவத்திற்கு பிறகு நான் காவல் நிலையம் சென்றேனா அல்லது எனது வீட்டிற்கு சென்றேனா என்றால் காவல் நிலையம் சென்றேன். சம்பவம் குறித்து புகார் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவம் குறித்து தகவல் கிடைக்கப்பெற்று பின்னர் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.06 18:31:21 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி